**OS.No.322/2014 P.W.1-சம்பத்குமார் 02.09.2026**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வழக்குரை நான் தாம்பரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகும். அந்த அசல் வழக்கு எண்.235/2014 என்றால் சரிதான். அது ஏற்கனவே பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் பிரதிவாதி தேவஆசிர்வாதம் தாக்கல் செய்த எதிர்வழக்குரை என்னிடம் காட்டப்டுவது தான். அது **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பக்கம் 2-ல் 8வது வரியில் தேவஆசிர்வாதத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபாய் 15 லட்சம் இந்த வழக்கின் பிரதிவாதி ரஞ்சித் மூலமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் உண்மையாக அவ்வாறு நடைபெறவில்லை.

2. நான் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை, தேவஆசிர்வாதத்திற்கு கொடுத்த கடனிற்காக பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு கொடுத்த கடன் வேறு, இவருக்கு கொடுத்த கடன் வேறு, இரண்டும் வெவ்வேறு தேதிகளாகும். வருடம் 2011 ஆகும். 2011-ல் தேவஆசிர்வாதத்திற்கு மொத்தம் ரூபாய் 15 லட்சம் கடன் கொடுத்துள்ளேன். தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் எவ்வளவு தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ரூ.6,80,000/-க்கு வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வருடத்தில் தேவஆசிர்வாதத்திற்கு ரூபாய் 21 லட்சமும், இந்த வழக்கின் பிரதிவாதிக்கு ரூபாய் 15 லட்சமும் கொடுப்பதற்கான தொகை என்னிடம் இல்லை என்றால் எனக்கு ரூபாய் 40 லட்சம் வங்கியில் OD இருந்தது அந்த பணத்தை எடுத்து கொடுத்தேன். அந்த பணம் மட்டுமல்லாமல் நகை வைத்தும், என்னுடைய சேமிப்பில் இருந்தும் கொடுத்தேன்.

3. மேற்படி நகை வைத்தது, சேமிப்பு கணக்கில் இருந்த தொகை, OD மூலமாக பெற்ற தொகை ஆகியவற்றை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். OD கணக்கை தற்போது வரை என்னால் தாக்கல் செய்யமுடியாது, மேற்படி வங்கி மூடப்பட்டுவிட்டது.

ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிக்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை, எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை